திருமதி டி. என். அனந்தநாயகி அவர்களுடைய திருத்தத் தீர்மானமும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி "ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப்பட வேண்டும் :—

1971-ம் ஆண்டு, மார்ச்சு திங்கள் 24-ம் நாளன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்ற கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர் களாவர்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்குவிடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பேரவையின் 6(1)-வது விதிக்கிணங்க, கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் முதல் கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக ( Panel of Chairman ) நான் நியமிக்கின் றேன்.

திரு. மா.வெ. கரிவேங்கடம்,

திருமதி ஜோதி வெங்கடாசலம்,

திரு. நா. வீராசாமி,

திரு. நீ. அன்புச்செழியன்,

திரு. என். கே. பழனிசாமி,

திரு. எம். எ. லத்தீப்.

**(இ) நூல்நிலையக் குழுவிற்குத் தேர்தல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, அரசினர் நூல் நிலையக் குழு தேர்தலுக்காக திரு. ஏ. ஆர். சுப்பையா அவர்களின் பெயர் நியமனம் செய்யப் பட்டுள்ளது. நிரப்பப்பட வேண்டிய ஒரு வெற்றிடத்திற்கு மேற்படி நியமனம் முறைப்படி செய்யப்பட்டுள்ளதால், திரு. ஏ. ஆர். சுப்பையா அவர்கள் அரசினர் நூல் நிலையக் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

**(ஈ) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1971-72-ஆம் ஆண்டுக்கான அவை யுரிமைக் குழுவிற்கு தமிழ்நாடு சட்டப்பேரவையின் பதினன்கு உறுப்பினர் களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட பதினன்கு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. திரு. ஆர். பொன்னப்ப நாடார்,

2. திரு. ஜி. ராஜாராம்,